# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

4-8-68

விலை 20 காசு



# படி அரிசி போர் ஆட்டம்?

"காங்கிரசுக் கட்சி இருபதாண்டுக் காலம் நடத்திய ஆட்சியினால் ஊழல்—பற்றுக்குறை—ஊதாரித்தனம் ஆகியவை ஏற்பட்டன; அதன் காரணமாக அவர்களை மக்கள், ஆட்சியிலிருந்து இறக்கி, தி. மு. க. வைப் பதவியில் அமர்த்தினர்.

"ஆட்சிக்கு வந்த 16 மாதங்களில் கழக அரசு உணவு முனையில் மகத்தான சாதனை புரிந்து உணவு நெருக்கடி—தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்திருக்கிறது.

"காங்கிரசு இந்த மாநிலத்தை ஆண்ட காலத்தில், அரிசிக்காக மக்கள் நாள் முழுவதும் 'க்யூ'வில் நின்றதையும், உணவுத் தானியக் கடைகள் கொள்ளையிடப்பட்டு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதையும் அவ்வளவு எளிதில் மக்கள் மறந்துவிடவில்லை. கழக அரசு திட்டமிட்டுப் பணியாற்றியதன் விளைவாக இன்று இந்த மாநிலத்தில் உணவு நெருக்கடிக்கு இடமே இல்லை.

"கழக ஆட்சியின் வருவதை அறியும் உணர்வு—அவற்றை உறுதியாகச் செயல்படுத்தியதன் விளைவு ஆகியவையால்—பருவமழை தவறியபோதிலும் உற்பத்தி பெருகி—வினியோக முறை ஏற்பட்டு—இந்த 16 மாத காலத்தில் உணவுத் துறையில் நாம் ஒரு திருப்பத்தைக் கடந்து விட்டோம்"

பருவமழை தவறியும் உணவுத் துறையின் அயராத உழைப்பின் காரணமாக உணவு உற்பத்தி பெருகி—கொள்முதல் முறை சீர்பட்டு—கொள்முதல் அதிகரித்து—கள்ளக் கடத்தலும் பதுக்கலும் கண்டுபிடிக்கப்பட்டு—மக்களுக்குத் தட்டுப்பாடின்றி உணவு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த 16 மாதகால ஆட்சியில் ரூ. 130 கோடி பெறுமானமுள்ள 13 இலட்சம் டன் தானியம் கொள்முதல் செய்யப்பட்டது; அத்துடன் தரமான அரிசி மக்களுக்குக் கிடைக்கத் தரநிர்ணயமும் செய்யப்பட்டுள்ளது.

கடத்தல்—பதுக்கல் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாகக் கடந்த ஆண்டில் மட்டும் ரூ. 44 இலட்சம் பெறுமானமுள்ள நெல், அரிசி பறிமுதல் செய்யப்பட்டது; கடத்தல் முனைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன; போலிக் கார்டுகள் ஒழிக்கப்பட்டுவிட்டன.

இத்தனைக்கும் பிறகு நம்முடைய தேவை அதிகரித்திருக்கிறது. முன்பு மாதத்துக்கு 50 ஆயிரம் டன் அரிசி தேவைப்பட்டது; இப்போது 70 ஆயிரம் டன்னாக உயர்ந்துள்ளது.

அரிசி விலையை மட்டுமின்றி பருப்பு வகைகள் விலையையும் எண்ணெய் விலையையும் கட்டுப்படுத்தியுள்ளோம்.

சர்க்கரைக் கட்டுப்பாட்டை ஓரளவுக்கு மத்திய அரசு நீக்கியபோதிலும், அதன் காரணமாகச் சர்க்கரை விலை ஏறாமல் ஓர் ஏற்பாட்டை மாநில அரசு செய்துள்ளது.

இந்த மாதம் 30 ஆயிரம் டன் கோதுமை கிடைத்துள்ளது; அத்துடன் ரவை மைதா



ஆகியவைகளை அதிக அளவில் ஒதுக்கித்தர மத்திய அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது.

கடந்த இரண்டு மாதங்களாக மாதம் ஒன்றுக்கு 6 ஆயிரம் டன் வீதம் சோளமும் மத்திய அரசு கொடுத்துள்ளது; இந்தச் சோளம் சேலம், கோவை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படும்.

கோதுமைக்கு ரூ. 100 கோடி மானியம் கொடுப்பதுபோல் படி அரிசிக்கு மானியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டபோது அதற்கு ஆதரவு தெரிவிக்காத காங்கிரசுக்காரர்கள்—உணவு உற்பத்தி பெருக்கத் திட்டத்துக்கு கடன் அல்லது மானியம் கொடுக்கவேண்டும் என்று நாம் கேட்டபோது அதை ஆதரிக்காத காங்கிரசுக்காரர்கள்—மத்திய அரசிடம் வாங்கிய கடனுக்குச் செலுத்த வேண்டிய வட்டியை ரத்து செய்து அல்லது தள்ளிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டபோது அதை எதிர்த்த காங்கிரசார் இன்று படி அரிசிக்காகப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று சொல்லுவது தி.மு.க. அரசின் சாதனைகளை மறைத்து — தி. மு. க. அரசுக்குக் கெட்ட பெயர் கொண்டு வருவதற்காகத் திட்டமிடப்படும் செயலாகும்.

ஒருபடி அரிசிக்காகப் போராட்டம் என்பது அல்ல அது; சீர்குலைந்த தங்கள் கட்சியை சரிபடுத்திக் கொண்டு மீண்டும் செல்வாக்குத் தேடிக் கொள்ள முடியுமா என்பதற்காகக் காங்கிரசுக் கட்சியில் உள்ள சிலர் நடத்தும் ஒத்திகையே அது!

கழக ஆட்சியின் நடவடிக்கைகள் காரணமாக உணவுத்துறையில் ஒரு தாராள நிலைஏற்பட்டிருப்பதால் இந்தமாநிலத்திலுள்ள ஒவ்வொருவரும் திருப்தியடைந்திருக்கிறார்கள். இதை மறைத்து திசை திருப்பவும், மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு அமைதியைச் சீர்குலைப்பதற்காகவும் செய்யப்படும் திட்டம் அது!

உண்மையிலேயே காங்கிரசுக்காரர்களுக்கு, 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி மக்களுக்குப் போடவேண்டும் என்பதில் அக்கறை இருக்குமானால், காங்கிரசு ஆட்சி நடத்தும் உபரி மாநிலங்களான ஆந்திரத்திலும், மைசூரிலும் படி அரிசி போட்டிருக்கலாம் அல்லவா? அல்லது சிறிய மாநிலமான பாண்டிச்சேரியிலாவது போட்டிருக்கலாமல்லவா.

படி,அரிசித் திட்டத்தை விரிவுபடுத்துமாறு கேட்பதற்கு இவர்களுக்கு யோக்கியதை கிடையாது; ஏனெனில், இத்திட்டம் கொண்டுவரப்பட்டபோது, 'இது தேவையற்றது' எனக் குரலெழுப்பினர்; இப்போது மாநிலம் முழுவதிலும் திட்டத்தை விரிவுபடுத்தச்சொல்வது,முன்னுக்குப் பின் முரணாக உள்ளது.

—மாண்புமிகு அமைச்சர் மதியழகன்

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 4—8—68 இதழ் 2

# திருந்தினால்தான் எதிர்காலம்!

67,000 அடி ஆழத்தில் புதைக்கப்பட்ட காங்கிரசுக் கட்சியைத் தோண்டி எடுத்து புத்துயிரூட்ட தமிழக மட்டத்தில் என்ன செய்வது என்றே இப்போதைய தமிழ்நாடு காங்கிரசுத் தலைவருக்கும்சரி, முன்னாள் அ. இ. கா. க. தலைவருக்கும்சரி, புரியவில்லை. பதறுகிறார்கள் துடிக்கிறார்கள்.

தூணைப்பற்றுவதா? துரும்பைப் பிடிப்பதா என்பது கூட தெளிவாகவில்லை. "லஞ்சம் லஞ்சம்" என்று புலம்புகிறார்கள் ஒருசமயம். "ஊழல் ஊழல்" என்று குரல் கொடுக்கிறார்கள் ஒருசமயம்.

காங்கிரசுக் கட்சியின் கவனம், புதிய போராட்டத்தின்பால் செல்லத் தொடங்கியதும் சென்னை தீவைப்புக்கள்கூட நின்றுபோய்விட்டன. எதனை எப்படிச் செய்தாவது மீண்டும் நாற்காலிகளைப் பிடித்துக் கொள்ள முடியாதா என்று அங்கலாய்த்துக்கொள்கிறார்கள்.

யார்மீது பழி போடுவது? எந்த புதிய அபாண்டத்தைச் சுமத்துவது என்ற யோசனைக்கே காங்கிரசுக்கு—குறிப்பாக காமராசருக்குக் காலம் போதவில்லை.

ஆட்சி அதிகாரத்தையும், போலீசின் தர்பாரையும் கைப்பற்றிக்கொண்டு அராஜகங்களையும், அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்துவிட்டு, கழகத் தலைவர்களையெல்லாம் காரண-காரியமற்ற முறையில் சிறைக்குள் தள்ளி சித்திரவதை செய்தும்' கூட்டங்களுக்கும் கழக நிகழ்ச்சிகளுக்கும் தடை விதித்தும், கழக வளர்ச்சியைத் தடைப்படுத்திவிட நினைத்து ஏமாந்து போனவர்கள்—மாறாக எதிர்ப்பலனைச் சந்தித்து வெந்து கருகிக் கொண்டிருப்பவர்கள், இப்போது கழகத்தை வீழ்த்திவிட முடியும் என்று கனவு கண்டு, வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

காமராசருக்கு மட்டுமே தமிழகத்து அரிசனங்கள் மேல் அளவுக்கு மீறிய அக்கறை வந்துவிட்டிருப்பதைப் போல மேடைதோறும் முழங்கத் தொடங்கிவிட்டிருக்கிறார். அரிசனங்கள் என்ற சேதி கேட்டதும் பதறித் துடிக்கவேண்டிய கக்கன் இருக்குமிடம் தெரியவில்லை. ஆந்திர மாநிலத்து அரிசனச் சிறுவன் பற்றிய செய்தி வந்திருந்தபோது அறிவை அடகு வைத்திருந்தவர், இல்லாத கற்பனைக்கும், போலிச் செய்திக்கும் தன் இதயத்தில் இடங்கொடுத்து, தன் முகத்தில் தானே கரி பூசிக்கொண்டிருக்கிறார்.

குளித்தலை வட்டம் நச்சலூரில் ஏழுமலை என்ற அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் தீயிடப் பெற்று கொடுமைக்காளாக்கப்பட்டதாக ஒரு செய்தி. இதுவும் வழக்கு மன்றத்தில் இருக்கிறது.

இதனை எடுத்து கழகத்தின்மேல் பூச நினைத்து, கழகத்துக்குக் களங்கம் உண்டாக்க நினைத்திருக்கிறார் காமராசர்—காங்கிரசுக்காரர்!! கழகம், அரிசன மக்கள் பால் அக்கறை காட்டவில்லை என்பதற்கும், மாறாகக் கொடுமைப்படுத்துகிறது என்பதைச் சுட்டிக்காட்டவும் இப்பிரசாரத்தை மேற்கொண்டார் கடந்த கிழமை!

பாவம், நச்சலூர் கிராமக் காங்கிரசுக் கமிட்டித் தலைவராக இருப்பவருக்கு காமராசரின் இதயம் புரியாமல்போய், உண்மையைப் புட்டுக் காட்டிவிட்டார்! காமராசர் முகத்தில் கரிபூசிவிட்டார்.

நச்சலூர் சம்பவத்தில், தி. மு. க. வுக்குத் துளியும் சம்பந்தமில்லை என்று துண்டறிக்கை மூலம் பொது மக்களுக்குத் தெளிவுபடுத்திவிட்டார்.

காமராசரது ஆசையில் மண், கூடை கூடையாக அள்ளிக் கொட்டப்பட்டுவிட்டது. இந்த தனது ராச தந்திரப் பிரசாரத்தைக் கூட ஒரு காங்கிரசுக்காரரே முறியடிப்பதா என்று ஆத்திரம்கூட அவருக்கு ஏற்பட்டிருக்கும், சுப்பிரமணியம் கட்சித் தலைவராக இல்லாமலிருந்திருந்தால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கைகூட எடுக்கப்பட்டிருக்கும்.

எந்த முயற்சியாலும் கழகத்தின் மீது மாசுகற்பிக்க முனைகின்ற தனக்கு இப்படி அடிமேல் அடிவரும் என்று நினைத்துப் பார்க்க மறுக்கின்ற தன்மையை காமராசர் மாற்றிக்கொள்ள வேண்டும்.

அன்றாட அரசியலில், நாட்டில் என்ன நடக்கிறது? உணவுப் பண்ட விலைகள் எந்த அளவுக்கு இறங்கி இருக்கிறது—இன்னமும் எதெதனைக் குறைக்க ஆளுங் கட்சிக்கு அரிய யோசனைக்கூறலாம் என்பன போன்ற முறையிலும், கழக அரசின் மாண்பினை, மக்கள் மத்தியில் எடுத்துக் கூறி, அதன்மூலம்தான் காங்கிரஸ் மதிப்புப்பெற முடியும் என்கிற வகையிலும், காமராசருடையவும், காங்கிரசினுடையவும் சிந்தனை மாறுபட்டாலல்லாது, இனி நிரந்தரமான எதிர்காலத்தை அது இழந்துவிட வேண்டியதாகவே இருக்கும்.

பொருளற்ற போராட்டங்கள்மூலம், மக்களது சிந்தனையையும், கவனத்தையும் திசை திருப்பிவிட்டு, ஊராட்சி நகராட்சி மன்றங்களின்மீது 'வலை'வீச எடுக்கும் எத்தகைய நடவடிக்கைகளும், அது தங்களுக்குத் தாங்களே குழிபறித்துக்கொள்ளும் முயற்சியாகத்தான் அமையும் என்பதை பொது மக்களே கேலிப் பொருளாகப் பேசிக்கொள்வதனை காங்கிரஸ் உணர்ந்து திருந்தினால்தான் நல்லது!

★



# இவையெல்லாம் இவ்வுலகைச் செய்திகளே!

ராஜிமணாளன்
தொகுத்தவை.

## சிரிப்புக்கு அல்ல—சிந்தனைக்கு!

இந்தியக் துணைக்கண்டத்தில் புழக்கத்திலிருக்கிற பல மொழிகளுள் ஒன்றுதான் இந்தியும். இந்த இந்திக்கு மட்டும் பட்டஞ்சூட்டி, தனிப்பவிசுதந்திட எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்யத் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறது இந்திப் பேரரசு. இந்திக்கு ஏற்றம் தேடத் துணியும் இந்திய அரசை, இந்தி அரசு என்றால் தான் என்னவாம்! குடிமுழுகிப் போய்விடாதல்லவா! இந்தி அரசின் இழிச்செயல்கள் கீழ்மட்டத்தையும் எட்டித் தாண்டிவிடும்போல இருக்கிறது. மத்திய அரசின் ஊழியர்களுக்கு சிறப்பாக அஞ்சல் — தந்தித்துறை ஊழியர்களுக்கு, இந்தியைப் படித்துக்கொண்டால், தனிச் சம்பளமும், ரொக்கப் பரிசளிப்பும் தரப்படும் என்பதாக அறிவித்திருக்கிறதாம் மண்டல் என்ற எம். பி. யிடம். நாட்டின்விவசாயத் திட்டங்களுக்கும்நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும்கூட கைவிரிக்கும் இந்தி அரசு, எந்தப் பணத்திலிருந்து இந்திக்கு இப்படி ஏற்றம்தேட முனைகிறது? யார் வீட்டு வரிப்பணம்? எந்த அந்நிய நாடு, இந்தியின் வாழ்வுக்கு உதவிப் பணம் வழங்குகிறது? மறுவாழ்வுத் திட்டங்களுக்குக்கூட கைவிரிக்கும்போது, இந்திக்கு என்ன வாழ்வு வேண்டிக்கிடக்கிறது? இதற்குப் பெயர்தான் ஒருமைப்பாட்டு முயற்சியா? என்றெண்ணிச் சிரிப்பதோடு மட்டும் இருந்துவிடக்கூடாது —சிந்திக்கவும் வேண்டும்!

## எதிர்காலம் வாழட்டும்!

சாதித் தொல்லையை ஒழித்துக்கட்டிவிடவேண்டும் என்று பேசாதவர்கள் இல்லை. எழுதாத ஏடுகளும் இல்லை. இதனைச் செயல்படுத்துவது எப்படி? என்பதிலே தான் வாதப்பிரதிவாதங்கள் எல்லாம்! சில அரசியல் கட்சிகள்கூட ஜாதியை ஒழிக்கத் தம்பட்டம் கட்டிக் கொண்டு கிளம்பியதுண்டு. தேர்தல் வந்துவிட்டால், அவையாவும் மூலை முடுக்கைப் பார்த்து பாய் விரித்துக் கொள்ளும். சாதிக் கொடுமையைச் சரித்துச் சாய்க்க தமிழகத்தில் பெரியார் ஈ. வே. ரா. தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார் அதேபோல் கழக அரசும் தன்பங்கைச் செலுத்தி இருக்கிறது. கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டோருக்கும், செய்து கொள்வோருக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று அறிவித்து—கலப்புத் திருமணங்களுக்கு ஊக்கம் காட்டி இருக்கிறது. இதுபோன்ற ஊக்கங்களால் நாளாகவாக நல்ல பலன் கிடைக்கக்கூடும். அதனை எதிர்பார்த்துத் தான் இந்த அறிவிப்பு! இப்படிப்பட்டவர்களுக்குப் பதக்கம் வழங்க காந்தியார் பிறந்த நாளான அக். 2 அரசு தேர்ந்தெடுத்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இதற்கான மனுவை, ஆகஸ்ட் 10க்குள், அந்தந்த மாவட்ட நல அதிகாரிகளுக்கு மனுச்செய்து கொள்ளவேண்டும். வருங்கால சந்ததியாவது சாதிக் கொடுமையிலிருந்து இதன்மூலம் மீளாதா?

## காரணம் இதுதானோ!

மத்திய அரசு, சிலபேருக்கு பத்மஸ்ரீ, பத்மபூஷண், பாரதரத்னா, பாரதபூஷண் போன்ற பட்டங்களை அளித்துக் கௌரவம் செய்வது வழக்கம்! பட்டங்களை வழங்கி விட்டுப்பின்னாலேயே ஓடிவந்து யாரும் இந்தப் பட்டங்களை, தம் பெயருக்கு முன்னால் போட்டுக் கொள்ளாதீர்கள் என்று கேட்டுக்கொள்வதும் வாடிக்கைதான்! கௌரவப் பட்டங்களை ஏன் போட்டுக்கொள்ளக் கூடாது என்று அரசு சொல்கிறது என பலபேர் குழம்பிக் கொண்டிருந்தார்கள். இப்போதுதான் இதுபற்றிய உண்மைகள் சில வெளியாகி இருக்கின்றன. பிரேம் சந்தவர்மா என்ற எம். பி. ஒருவர் உண்மையைக் கூறி குட்டை உடைத்திருக்கிறார். சாராய வியாபாரிகள் சில பேருக்கும் இதுபோன்ற பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கிறதாம்!! இது சரியா? என்றே கேட்டிருக்கிறார் அவர். இதனால்தானோ என்னவோ பட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளாதீர்கள் என்று மத்திய அரசு அடிக்கடி வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கிறது.

## விரைவு தேவை!

பொது மக்களுக்கு நன்மை விளையக் கூடிய எந்த ஒன்றாக இருந்தாலும் அதனை சட்டுப் புட்டென்று செய்து முடித்துவிடவேண்டும்; கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டபின் அதன் தீவிர திட்டங்களிலும், முயற்சிகளிலும் உணவுப் பண்டங்களின் விலைகள் சரிந்துகொண்டு வருகின்றன. இதனைக் காணச்சகியாத காங்கிரஸ்கூட பருவ மழை மீது காய்ந்துகொள்ளத் தொடங்கியது. இது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் என்று இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் திரு. எல். கே. ஜா. கூட கண்டித்திருக்கிறார். விலைவாசிகள் இறங்கி இருப்பதற்கு அரசின் கொள்கைகளே காரணம் என்று அடித்துச் சொல்லிவிட்டார்! இவ்வளவுக்குப் பிறகும் உணவுப் பண்ட விற்பனை நிலையங்களில் விலையைக் குறைத்து விற்க மனம் இல்லாதவர்களாய் சிலர் இருக்கிறார்கள். உணவமைச்சர் வேண்டுகோள்களை விடுத்துக்கொண்டிருக்கிறார் என்றாலும் நெல்லை மாவட்டத்தில் நாகர் கோவில் மக்கள் நேரடி நடவடிக்கையிலேயே ஈடுபட்டுவிட்டிருக்கிறார்கள். பொதுமக்கள் ஒரு ஓட்டல் முன் கூடி குரலெழுப்பி இருக்கிறார்கள்—விலையைக் குறை என்பதாக! விலையைக் குறைக்காக ஓட்டல்களுக்கு ரேஷன் அனுமதியை ரத்துச் செய்ய செய்யவேண்டும் என்ற தீர்மானம் பொருள்படைத்த ஒன்று. இந்த அடிப்படையில் அரசு நடவக்கை எடுக்கத் தொடங்கினால் விரைவில் நல்ல பலன் விளையத் தான் செய்யும்.

★




வாழ்க்கை என்பது, எந்த நேரத்திலும் நிர்மலமான நீரோட்டமாக இருப்பதில்லை. குமுறிக் கொப்பளிப்பதும் உண்டு; குளிர்ந்து இதமளிப்பதும் உண்டு. இரவு, பகல் எந்த நேரத்திலும் தென்றல் மட்டுமே வீசிக்கொண்டிருந்தால், அப்புறம் தென்றலின் இனிமையைச் சுவைக்க முடியாமலே போய்விடக் கூடும். அதுபோலவே கடும் புயல் வீசிக்கொண்டிருந்தாலும் கடுமை என்பதுபற்றி அறிந்துகொள்ளவே முடியாது.

எந்த ஒருவருடைய வாழ்க்கையிலும் இன்பமும், துன்பமும் வந்துவந்து போகும்போது மட்டுமே வாழ்க்கை இன்பத்தை வகையோடு அனுபவிக்க முடிகிறது. ஒரு சீராக வாழ்க்கை அமைந்துவிடுமானால் அப்புறம் அது உப்புச்சப்பற்றதாகிப் போய்விடும். சுவை கெட்டுப்போய்விட்ட பிறகு, பாழ்பண்டம் வீசியெறியப்படவேண்டிய ஒன்றல்லவா!

முகவை மாவட்டத்தில் வாழ்கின்ற ஒருவருடைய வாழ்க்கை அமைப்பைப் போன்று இங்கிலாந்து நாட்டின் எங்கோ ஓர் மூலையில் உள்ள யாரோ ஒருவருக்கு அமைந்துவிட்டிருக்கக்கூடும். அவரைப் போலவே அமெரிக்க நாட்டிலும் ஒருவர் இருந்தால் வியப்பதற்கில்லை.

வரலாற்றுச் சம்பவங்களிலேயே ரோமாபுரி நாட்டு நிகழ்ச்சிகள் சூடும் சுவையும் நிரம்பியவை. மயிர்க்கூச்செறியச் செய்யும் சம்பவங்கள் சர்வசாதாரணமாக நிகழ்வது இயற்கை. இதுபோல் இன்னொரு நாட்டில் நிகழக்கூடாது என்பது இயற்கையின் சட்டமல்லவே!

ரோம் நாட்டு சுவை வரலாற்றைப்போலவே கிரேக்கத்தின் வரலாற்று ஏடுகளிலும் சுவையான செய்திகள் மலிந்திருக்கத்தான் செய்கின்றன. கற்பனைக்கு எட்டாத—காட்சிக்குள் அகப்படாத நிகழ்ச்சிகள் திடீர்திடீர் என்று நிகழ்ந்து நிதானத்தை இழக்கச் செய்திருக்கின்றன.

இந்தியத் துணைக்கண்டத்திலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் உண்டு; தமிழ் நாடும் விதிவிலக்காக இல்லை.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர், இளங்கோவடிகளா சாத்தனாரா? என்பதில் கருத்து வேறுபாடுகள் புதிதாக முகிழ்க்கத் தொடங்கியுள்ளன. என்றாலும் இளங்கோவடிகள் அல்லர் என்பதை இன்னமும் எவரும் முடிவாகக் கூறிவிடவில்லை. இந்த இளங்கோவடிகள் பற்றிய வரலாற்றுப் பாடம், மனித சமூகத்துக்கு நல்ல பல கருத்துக்களைப் புகுத்துவனவாக அமைந்திருக்கிறது.

அண்ணன் இருக்கும்போது, தானே அரசுரிமை பெற விருப்பதாக நிமித்திகன் சொன்ன சொல்லை பொய்யென்றாக்கிய பீடுமிக்க பெருமை வரலாறு இளங்கோவடிகளுடையது. இதேபோன்ற வரலாற்று ஒப்புமை ஒன்று கிரேக்க நாட்டின் சரித்திரத்திலும் காணப்படுகிறது. அதனால் கிரேக்க வரலாறு பொய்யானது என்றோ, தமிழக வரலாறு தழுவல் பெற்றது என்றோ எவரும் கூறத் துணியமாட்டார்கள்!

ஒப்புமை கொண்ட ஒரு வரலாற்றுச் சம்பவம் என்னைக் கவர்ந்தது! கதைப் பாத்திரங்களில் சிலர் வரலாற்றில் வந்திருப்பவர்கள். சிலரை நானே பெற்றுவிட்டிருக்கிறேன் — வரலாற்றைச் சுவையாக்கி வழங்கவேண்டுமென்பதற்காக!

கிரேக்க நாகரிகம்பற்றி புகழப்படுகின்ற வேளைகளும் உண்டு; வியக்கின்ற சந்தர்ப்பங்களும் இருக்கிறது.

இளங்கோவடிகளுக்கு "கணிதம்" கூறியதற்குப் பின்னால், அக்கணித வல்லுநன் பற்றிய சான்றுகள் இல்லை; இடம் பெறவில்லை.

அரசிளங்குமரன் ஒருவனுக்கு இதேபோன்று கிரேக்கப் பண்பாட்டையொட்டி நிமித்திகம் சொல்லப்படுகிறது. அதுவே இக்கதையையும் நடத்திச் செல்லுகிறது. இனி நீங்கள் தொடரலாம்.......

## 1. காதல் வெளிப்பட்டது—கன்னி அகப்பட்டாள்!

கிரேக்க நாட்டில் தெசாலி மண்டலத்தைக் கட்டியாண்ட லைகர்ஸ் மன்னனின் நந்தவனம் அது. நகருக்கு அப்பால் கம்பீரமாகத் திகழ்ந்த அரண்மனைக்கருகில், உயர்தர அரசியல் அலுவலர் தவிர மற்றவர்கள், புகாவண்ணம் அந்தப் பூங்கா கட்டுக்காவலுடன் விளங்கியது. அதன் நடுவே ஒரு பொய்கை. பொய்கையின் நடுவே ஒரு ஆழி மன்றம், ஆழிமன்றத்தின் மையத்தில் ஒரு மேடை, மேடைக்குச் செல்ல ஒரு அழகான பாலம். சோலை முழுவதும் பூ மரங்கள் தூங்கும் இளங்கொடிகள்; இவற்றினூடே, பன்னிறப் பூக்கள் வேய்ந்த வளைவு வழிகள். அவற்றின் இடையிடையே, அமர்வதற்கான எழில்கள், ஆங்காகே எப்போதும் நீர் தெளிக்கும் பளிங்குச்சுனைகள். அஸ்தமனமாகி அந்தி மயங்கிவிட்டது. முகம்பார்த்து இனம் கண்டுகொள்ள முடியாத இரண்டும் கெட்டவேளை நடந்து கொண்டிருந்தது. பூங்காவின் தலைவாசலில் நின்ற சிப்பாய் அவனுக்கு விடுதலை கொடுக்கும் மணியோசையை அரண்மனையிலிருந்து எதிர் நோக்கி இருந்தான். அவனுடைய செவிகள் அரண்மனைப் பக்கமே சாய்ந்து கிடந்தன. அவனும் எவ்வளவு நாழிகைதான் காத்திருப்பான். சலிப்புத் தட்டிவிட்டது. நடை பழகத்தொடங்கினன்; நன்ருக இருட்டிவிட்டது!

பூங்காவின் தெற்கு முனையில் கோட்டைச் சுவரைத் தாண்டிக் குதித்து ஒரு உருவம் பூங்காவிற்குள் நுழைந்து பதுங்கி ஆழிமன்றம் நோக்கி விரைந்தது. அந்த உருவத்தின் இடுப்பிலே வாள் தொங்கியது; தாக்குதலைத் தாங்கும் கேடயம் தொங்கியது. இருந்தும், உரிமையற்ற இடத்திற்குள் நியாயமற்ற முறையில் புகுந்ததை எண்ணி அந்த உயிர்ச் சடலம் நடுங்கிக் கொண்டிருந்தது. எத்தனையோமுறை கொல்லை வழியில் கள்ளத்தனமாகப் புகுந்த உருவம்தான் அது! ஆனாலும் அச்சம் ஓயவில்லை; நடுக்கம் தீரவில்லை! வியர்வை குறையவில்லை!! மின்னும் மைவண்டு விழிகளுடன் அந்த உருவம் முகப்பு வாசலையே எதிர் நோக்கி இருந்தது.

நேரம் செல்லச் செல்ல கோட்டை மதில் ஓரத்தில் மக்கள் நடமாட்டம் குறைந்து கொண்டே வந்தது. பூங்காவின் முகப்புக்கு வழக்கமாய் வரும் அரண்மனை விளக்கு அன்று வரவில்லை, எங்கும் இருட்டுமயம். காவல்காரன் இதயம் குமுறித்தீர்த்திருக்கவேண்டும்! சற்று நேரத்திற்குப் பிறகு திடீரென்று மணியோசை கேட்டது, எந்தக் கணக்கிற்கும் ஒத்துவராத நேரத்தில் அந்த மணி ஒலித்தது. காவல்காரனுக்கு மட்டும் இந்த ஐயம் எழவில்லை. விடுதலைக்கு அவன் தவம் கிடந்தான்! ஆனல், பூங்காவுக்குள்-அழகிய பூங்காவுக்குள் எந்த இன்பத்தையும் அனுபவிக்க முடியாமல் சுருண்டு கிடந்த அத்தக் கள்ள உருவத்திற்கு ஒரே குழப்பமாக இருந்தது. ஒருநாளுமில்லாமல் இன்று மட்டும் ஏன் மணி ஒலித்தது என்பதை நினைத்து நினைத்து அந்த உருவம் திகைத்தது. துளிக்கு ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே இருந்தது.



அரை நாழிகைக்குப் பிறகு, அரண்மனையிலிருந்து ஒரு விளக்கு பூங்காவின் பக்கமாக நகர்ந்து வந்து கொண்டிருந்தது. அடையாளம் கண்டுகொள்ள முடியாத ஒரு உருவம் அந்த விளக்கைத் தூக்கி வந்தது.

விளக்கு வாசலருகில் வந்ததும் பழைய காவல்காரன் புதிய காவல்காரனிடம் விடை கூறிப் பிரிந்தான், புதிய காவல்காரன் விளக்கை கம்பத்தில் பொறுத்திவிட்டு; பூங்காவுக்குள் வந்தான். இயற்கைக்கு மாருன வகையில் நாடகத்தில் வரும் சிப்பாயைப்போல் அவன் நடந்து வந்தான்.

காவல்காரன் ஆழிமன்றத்துக்கு அருகில் வந்துவிட்டான். ஒருமுறை மன்றத்தைச் சுற்றினன், நடை பாலத்தில் நின்று நாற்புறத்திலும் பார்த்தான்.

"பெர்க்ளீஸ்!"

......................

"பெர்க்ளீஸ்!" அந்த இளஞ் சிப்பாய் பூனையைப்போல் அடுத்தடுத்து அழைத்தான். அந்த அழைப்பில் பயம் பின்னிக்கிடந்தது, அருவி நீரின் சிதறல் காணப்பட்டது.

ஆழிமன்றத்தில் பதுங்கிக்கிடந்த உருவம் முகமலர்ச்சியுடன் தலையைத் தூக்கிப்பார்த்தது; பயம் தெளிந்துவிட்டது போலும். மலர் மணம் நுழைய நாசித்துவாரங்கள் வழிவிட்டு நின்றன.

''அல்பாஷியா!............செத்துப் பிழைத்துவிட்டேன் போ! ஒவ்வொரு அணுவாகச் செத்தேன் கண்ணே! ஏன் இவ்வளவு நாழிகை அரண்மனையில் 'காரணமில்லாமல் மணி ஒலித்ததே எதற்காக?'' என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டே அந்த உருவம் வந்தது.

காவற்காரன் உடையில் இருந்த அல்பாஷியா பெர்க்ளீசைஅணைத்து அவன் மடியில் சாய்ந்தாள்.

ஒரு தவற்றைத் தொடர்ந்து ஒன்பது தவறுகள் நடந்துவிட்டன. இப்பொழுது காவலுக்கு வரவேண்டியவன் நமது இரகசியத்தை அறிந்தவன், நல்லவன் அவனுக்கு பதிலாகவே நான் வந்திருக்கிறேன். பொழுது சாய்ந்து இருட்டுவரட்டும் என்று காத்திருந்தேன். நேரம் வந்து மணியை அடித்துவிட்டு வந்துவிட்டேன்'' என்ருள் அல்பாஷியா.

பெர்க்ளீஸ் அவள் கன்னத்தைத் தடவிக்கொண்டிருந்தான். எண்ணையில் தோய்த்தெடுத்ததுபோல் மரத்தில் தொங்கிய ஆப்பிள் பழங்கள் மின்னலிட்டதை அவன் பார்த்தான். காதலியின் கன்னத்தை அந்தப் பழங்களுக்கு இணையாக்கிக் கவிதீட்டும் நிலையிலே அவன் இல்லை. கெல்லாஸ் மண்டபத்தின் அதிபதியான கொற்றவன் கிளிஸ் தெனீசியின் இளைய குமாரனை அவன், திங்களுக்கொருமுறை தன்னுடைய ஆருயிர்க் காதலியைச் சந்திக்கிருன். அவளோ தெசாலி நாட்டு அரசிளங்குமரி. லைகர்கஸ் மன்னனின் ஒரே மகள். நலமாக வாழ்ந்து நாட்டைக் காக்க வேண்டியவள். உடன் பிறந்தாரில்லை அவளுக்கு. உயிரோடு ஒன்றிவிட்ட காதலனைக்காண மாற்றுடையில் வந்திருக்கிருள். குளிர்ந்த நேரம். புதுப்புது மலர்கள் மொட்டவிழ்த்து நறுமணம் பரப்பிக்கொண்டிருந்தன; யாருமில்லை தனிமை!!

''இன்றுபோனல் அடுத்த திங்கள் தான் வருவாய்! என்னல் பொறுத்திருக்க முடியவில்லை அல்பாஷியா! நாம் கிழமை ஒருமுறை சந்திக்கக் கூடாதா'' —பிச்சைக்காரனைப்போல் தாழ்ந்து, பணிந்து கேட்டான் காதல் பிச்சைக்காரன் பெர்க்ளீஸ்!

''எனக்கும் ஆசைதான்! அன்பு குறையுமே என்று அஞ்சுகிறேன் பெர்க்ளீஸ்!''

''நான் ஆறு மலை தாண்டி வர அஞ்சவில்லை. ஊண் உறக்கம் துறக்கவும் தயாராக இருக்கிறேன். அல்பாஷியா நீ சொல்! நான் வருகிறேன். கெல்லாஸ் மண்டபத்தில் எனக்கென்னவேலை? தந்தைக்குத் துணையாக ராஜ்யபாரத்தை அண்ணன் டிராக்கோ கவனித்துக் கொள்கிருர். எனக்காக வந்துபோ அல்பாஷியா'' இவ்வாறு பெர்க்ளீஸ் கெஞ்சியதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் இளகிவிட்டாள். ஆனல் அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவன் நெஞ்சில் படிந்திருந்த தலையை நிமிர்த்தி அவனது முகத்தை உணர்வுடன் பார்த்தாள்.

''பெர்க்ளீஸ்!''

''என்ன அல்பா......நேரமாகிவிட்டதா? இன்னும் கால் நாழிகை பொறுத்துப் போகலாமே!

''நேரமாகிவிட்டது பெர்க்ளீஸ்!''

''நீயாகச் சொல்கிருய்; உள்ளத்தைக் கேட்டுச்சொல்! ''பெர்க்ளீஸ் கிண்டலாகச் சொன்னன்.

அல்பாஷியா பதில் பேச வாயெடுத்தாள். அதற்குள் 'சரக்' என்ற ஓசை எங்கிருந்தோ மிதந்து வந்தது. இருவரும் நடுங்கிப்போனர்கள். பூங்காவில் அமைதி நிலவியது. அந்த அமைதியில் இனிமை இல்லை; பயங்கரம் ஒளிந்திருப்பதுபோல் காதலர் நெஞ்சுக்குப்பட்டது. ஓசை வந்த திக்கை நோக்கி ஊர்ந்து போனர்கள். பூச்செடிகளை மிதித்து ஒடித்துக்கொண்டு ஒரு உருவம் குடு குடு வென்று வேகமாக ஓடியது. அல்பாஷியாவுக்கு உயிரே போய்விட்டது போலாகிவிட்டது. அப்படியேமயங்கிச் சாய்ந்துவிட்டாள். பெர்க்ளீஸ் சிறிதும் கவலைப்படவில்லை. அவளைத் தூக்கி நிறுத்தி முகத்தில் நீர் தெளித்தான்.

''அல்பாஷியா! நீ கோழை! ஏன் அஞ்சிசாகிருய்! நானுவது அந்நியன்! என்னை உதைக்கலாம்பொய்க் குற்றம் சாட்டி கைவிலங்குப் பூட்டி இழுத்துப் போகலாம். நீயோ ராஜகுமாரி. பட்டத்திற்கு வரவேண்டியவள். சட்டமே உன் நாமுனையில் கிடக்கும்போது நீ எதற்காக மயங்கவேண்டும்!'' பெர்க்ளீஸ் துணிவுடன் வார்த்தைகளைத் தொடுத்தான்.

''தவறு பெர்க்ளீஸ்! நான் இளவரசியென்பதால்தான் பயப்படுகிறேன். தேசாலி நாட்டின் சாதாரணப் பிரஜையாக இருந்தால் கவலைப்பட்டிருக்கமாட்டேன். ராணியாக வரவேண்டியவள் கள்ளக்காதல் கொண்டலைகிருள் என்று நாட்டுக்குத் தெரிந்தால் அரச வம்சத்து அந்தஸ்து அழியுமே என்றுதான் தவிக்கிறேன், சொல் பெர்க்ளீஸ்! இப்பொழுது ஓடியவன் என்னை அடையாளம் கண்டு கொண்டிருப்பானு? எனக்குப் பயமாக இருக்கிறது பெர்க்ளீஸ்! நமது நாடகம் அம்பலத்திற்கு வந்துவிட்டதே! அய்யய்யோ அந்நிய நாட்டார் சிரிக்கப் போகிருர்களே பெர்க்ளீஸ்!'' அல்பாஷியா கண்ணீர் வடித்தாள்.

பெர்க்ளீஸ் சிரித்தான். அமைதியான அந்த நேரத்தில் அவனது சிரிப்பொலி கோட்டைச் சுவரில் மோதி எதிரொலித்தது. அல்பாஷியா பயந்து அவனது இரு கைகளைக்கொண்டு பெர்க்ளீசின் வாயைப் பொத்தினுள்.

''அல்பாஷியா நீ பேதை காதல் புரிவது, கொலை செய்தல் அல்ல, களவாடுதல் அல்ல! நேர்மாருனது, கொலையும் களவும் மறைப்பதிலே தான் வெற்றியிருக்கிறது. ஆனல் காதல் அம்பலமாவதிலேதான்

(15-ம் பக்கம் பார்க்க)



மானேஜரின் தலைக்கு உயரே தொங்கிய சுவர்க் கடிகாரம் ஐந்துமுறை அடித்து ஓய்ந்தது.

சென்னிமலை டிரேடிங் கம்பெனியின் ஆபீஸ் நேரம் முடிந்துவிட்டது. ஜூனியர் அக்கவுண்டன்ட்பலராமன் பைல்களை மூடிவிட்டு எழுந்தான். அவசர அவசரமாய்ப் புறப்பட்டு கம்பெனியின் வெளி வாசலைக் கடந்து மெயின் ரோட்டில் நடக்க ஆரம்பித்தான்.

"சார்! சார்!"

பியூன் தங்கப்பன் பின்னுலிருந்து கூப்பிடுவதை அறிந்து வீதியின் ஓரமாய் நின்ருன் பலராமன்.

'என்ன தங்கம்?"

"ரொம்ப அவசரமா போறீங்களே அங்கேதான் போறீங்க போலிருக்கு'

'ஆமா தங்கம். இன்னிக்கு மனசு ஜாலியா இருக்கு. வீட்டிலே எனக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணியிருக்காங்க—நான் அடிக்கடி சொல்லுவேனே, அந்தப் பொண்ணுதான்"—என்று கூச்சமும் திருப்தியும் கலந்த குரலில் கூறினன் பலராமன்.

"ரொம்ப சந்தோஷம் சார். மத்தியான நீங்க லட்டரை உடைக்கும் போதே உங்க முகத்தைப் பார்த்து ஏதோ நல்ல சமாசாரம் இருக்கும்னு நினைச்சேன். விரும்பிய மாதிரி மாமன் பொண்ணையே கட்டிக்கப் போறீங்க. இனிமே அங்கே போவாட்டி என்ன சார்? நான் மறுபடியும் சொல்றேன்னு கோவிச்சுக் காதீங்க. நீங்க சங்கரியின் தொடர்பை விட்டுட்டாதான் நல்லதுன்னு எனக்குப் படுது"

"என்னப்பா நீ போன வாரமும் இப்படித்தான் சொன்னே. என்ன விஷயம்னு கேட்டா, அந்த ஜனங்க எல்லாமே மோசமானவங்க, கெடுத்துப் போடுவாங்கன்னு சொல்றே. இப்போ என்ன கெட்டுப் போச்சு சொல்லு?"




"ஆமாங்க சார். அந்தப் பக்கத்து ஜனங்க மோசந்தான். முன்னப் பின்னே அவமானம் உண்டாகக் கூடாதுன்னுதான் சொன்னேன்.... இன்னிக்கு நீங்க சந்தோஷமா இருக்கீங்க. நான் ஏன் கெடுக்கிறேன்?" என்று வருத்தத்துடன் கூறிய தங்கப்பனின் கையில் ஒரு ரூபாய் நோட்டைக் கொடுத்தான் பலராமன்.

அவனுக்கு அப்போது உண்மையிலேயே தங்கப்பனின்மேல் கோபமாக வந்தது. 'அழகான பெண்ணோடு ஆசையாக இருந்தால் இத்தப் பயல்களுக்குப் பொறுப்பதில்லை' என்று முணுமுணுத்துக் கொண்டான்.

அவன் இனமாகக் கொடுத்த ஒரு ரூபாயை வாங்கிக்கொண்டு தங்கப்பன் போய்விட்டான்.

பலராமன் அந்தக் கம்பெனியில் ஜூனியர் கணக்கராகச் சேர்ந்து எட்டு மாதங்கள்கூட ஆகவில்லை. அவன் பி. ஏ. படித்தவன்தான் என்ருலும், பார்ப்பதற்கு சிறுபையன் போலவே தோன்றினன். கூச்ச சுபாவம் வேறு. ஆனல் பணக்கார வீட்டுப் பிள்ளையாகையால் ஆபீஸ் பியூன் தங்கப்பன் அவனுக்குச்சின்ன காரியங்களைச் செய்து கொடுத்தாலும் மகிழ்ந்து இனம் கொடுப்பான்.

அந்தப் பழக்கத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளும் வகையில், பலராமனின் அந்தரங்க சிநேகிதனகவே ஆகிவிட்டான் தங்கப்பன்.

மயிலைப் பள்ளத்துக்கு பலராமனைக் கூட்டிக்கொண்டுபோய் பழக்கப்படுத்தியவன் தங்கப்பன்தான். டவுனில் இருந்து கொஞ்சதூரம் விலகி ஒதுக்குப்புறமாக, சற்றுப் பள்ளத்தில் இருந்த ஒரு தெருவின் பெயர்தான் மயிலைப்பள்ளம். அந்தத் தெருவில் குடியிருந்தவர்கள் அனைவருமே அன்ருடம் காய்ச்சிகள். ரயிலடியிலும் பஸ் ஸ்டாண்டிலும் மூட்டை தூக்கிப் பிழைக்கும் கூலிகளும், பெட்டிக் கடைகளிலும் சினிமா கொட்டகைகளிலும் சரக்கு விற்கும் பொடியன்களுமான ஏழைகள் அங்கு குடிசைகள் போட்டிருந்தனர். பாதிப்பேர்கள் ஒரு வேலையுமில்லாமல் இரவும் பகலும் டவுன் வீதிகளில் சோம்பேறிகளாய் சுற்றிக்கொண்டிருப்பவர்கள். அநேகமாய், எல்லாருமே நிலையான பிழைப்புக்கு வழியில்லாதவர்களிடையே பொதுவாக இருந்துவரும் குடிப்பழக்கத்தைக் கொண்டவர்கள்.

அங்குதான் இருந்தாள் சங்கரி.

அங்கிருந்த ஒரு விதவைப் பெண்ணுக்கும் தங்கப்பனுக்கும் அந்தரங்க தொடர்பு இருந்து வந்தது. பலராமனுக்கு மெல்லமெல்ல ஆசையூட்டி ஒருநாள் அவனையும் தன்னோடு கூட்டிச் சென்ருன். நல்லகாலமோ அல்லது கெட்டகாலமோ, அடுத்த வீட்டுப் பருவக் குமரி சங்கரியின் கட்டழகு மேனி பலராமனின் பார்வையில் விழுந்தது.

அதுதான் ஆரம்பம் — சுமார் நான்கு மாதங்களுக்கு முன்னே நடந்தது.

ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு மார்க்கெட்டில் இரண்டு முழம் மல்லிகைச்சரம் வாங்கிக்கொண்டு பலராமன் மயிலைப்பள்ளம் நோக்கி நடந்தபோது மணி ஏழு ஆகிவிட்டது. சனிக்கிழமைகளில் அவன் வழக்கமாகச் செல்லுகின்ற நேரம்தான் அது.

அவனுக்கு அந்தபதினறு வயதுக் கன்னியின்மீது கரைகாணுத ஒரு மோகம் இருந்தது. சங்கரியின் குலம் கோத்திரம் எவ்வளவு கீழானவை! ஆனல் அவளது கட்டுக்குலையாத சிவந்த மேனியும், செப்புச் சிலை போன்ற உருவ எழிலும், தேனினும் இனிய சுவைதரும் செம்பவள அதரங்களும் தரத்தில் மேலானவைதான். அவற்றில் கொண்ட மயக்கம் அவனை அவள்பால் ஈர்த்து அணைத்துக்கொண்டபோதிலும், அவனுக்கு ஒவ்வொரு தடவையும் அவளை நாடிச் செல்லும்போதெல்லாம் உள்ளூற பயம் இருந்தே வந்தது! கம்

பெனி நண்பர்களுக்குத் தெரிந்தால் எத்தனை கேவலம்! எல்லாவற்றுக்கும் மேல் அயலூரில் இருக்கும் அப்பா அம்மாவுக்குத் தெரிந்து போனுல்?......அந்த அவமானத்தை அவன் தாங்கக்கூடியவனல்ல!

போனவாரம் ஒரு சின்ன கேள்வியினுல் அவன் எவ்வளவு தடுமாறிப் போனுன்? கணநேர அதிர்ச்சியால் தொண்டைகூட கப்பென்று அடைத்துக்கொண்டதே, 'சங்கரியைத் திருமணமே செய்துகொள்வீர்களா சார்?' என்று தங்கப்பன் அவனிடம் குத்தலாகக் கேட்டபோது!

அன்றைக்கு அவன் தடுமாறி நின்றபோது தங்கப்பனுக்கே பரிதாபமாகப் போயிற்று.

'இந்த விவகாரங்களில் உங்களுக்குப்போதிய துணிச்சல் உண்டா என்று பார்க்கிறதுக்குத்தான் வேடிக்கையா கேட்டேன் சார். இப்படி வியர்த்துப் போயிட்டீங்களே!' என்று கேலி செய்தான் அவன்.

'அதெல்லாம் முடியுமா தங்கம்? இதெல்லாம் கொஞ்ச நாளைக்கு தானே! எனக்கென்று மாமன் மகள் ஒருத்தி இருக்கிருள். மாமாவும் முகூர்த்தநாளுக்குக்காத்துக்கொண்டிருக்கிருர்' என்றெல்லாம் குழறினுன் பலராமன்.

'அப்படின்னு சங்கரியின் தொடர்பைவிட்டுப் போடுங்க சார். அந்த ஜனங்க மோசமானவங்க உங்களைப் போலவங்களை ஏமாத்திடுவாங்க' என்று எச்சரித்தான் தங்கப்பன்.........

இந்த நினைவு வந்ததும் பலராமனின் நடையின் வேகம் கொஞ்சம் குறைந்தது. ஏதேதோ இனம் புரியாத கலவரம் அவனது மனத்தைச் சூழ்ந்தது. ஆனுல் அந்த நிலையிலும் சங்கரியின் எழில் வதனமும் கனிந்த உடலழகும் நினைவில் எழுந்து அந்த கலவரத்தை ஓட்டியது. கையில் இருந்த மல்லிகையின் மன மோகன வாசனை அவனது நடையை மீண்டும் வேகப்படுத்தியது. சங்கரியுடன் இதுவே கடைசி சந்திப்பாய், இரவு முழுவதும் ஆசை தீர தங்கியிருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

மயிலைப் பள்ளத்து சுப்பிரமணியர் கோயிலில் ஏதோ வெளிச்சம் தெரிந்தது. அந்தப் பிரகாசமான வெளிச்சம், மெயின் சாலையிலிருந்து அந்தத் தெருவுக்குப் பிரிந்து செல்லும் சிறு சந்து வழியில் படர்ந்திருக்கும் இருளை மிகைப்படுத்திக் காட்டியது. கோயில் வெளிச்சம் கண்களில் படாமல் இடது கையினுல் மறைத்துக் கொண்டே சந்துக்குள் புகுந்து குனிந்தவாறு மெதுவாக நடந்தான் பலராமன்.

சுப்பிரமணியர் கோயிலில் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது. அருகில் நின்றுந்த ஒருவன் அதைக் கீழே இறக்கி காற்றடிக்க ஆரம்பித்தான்.

''என்னப்பா வெளிச்சம் இங்கே?'' என்று அந்த ஆளைக் கேட்டான் பலராமன்.

'காத்தாலே ஒரு கண்ணுலமுங்க



என்று தலை நிமிர்த்தாமலே பதில் சொன்னுன் அந்த ஆள்.

'கல்யாணமென்ருல் ஒரு பரபரப்பையும் காணுேமே. உம்; இந்த சின்ன ஊருக்கு அவ்வளவுதான்' என்று மனத்தில் எண்ணயவாறு பலராமன் கோயிலைக் கடந்து தெருவுக்குள் நுழைந்தான். தனக்கு ஊரிலே நடக்கப்போகும் கல்யாணம் வெகு தடபுடலாக இருக்கும் என்ற நினைவு அவனது உள்ளத்தைப் பெருமையால் நிறைத்தது.

கோயில் விளக்கின் வெளிச்சம் தெரு முழுவதிலும் நீண்டு படர்ந்திருந்ததால் தடையின்றி வேகமாக நடந்தான். தெருஇறக்கத்தில்தங்கள் வீட்டின் நடைவாசலில் நின்று இரண்டொரு பெண்கள் அவனைக் கவர்ந்து இழுக்கும் விழிகளால் விழுங்குவதுபோல் உற்றுப் பார்த்துக் கொண்டு புன்னகை புரிந்தனர். அவன் கூச்சத்துடன் தலை குனிந்தவாறு நடந்து சங்கரியின் வீட்டை அடைந்தான்.

கதவைத் தட்டியதும் சங்கரிதான் வந்து திறந்தாள்.

''வாங்க'' என்று வரவேற்ற சங்கரி வெட்கத்துடன் முகம் கவிழ்த்துக் கொண்டாள்.

''இதென்ன வெட்கம், கல்யாணப் பெண் மாதிரி. அப்பா இல்லையா?''— இருக்க மாட்டார், ரயிலடியில் கூலிக்காக அலைந்து கொண்டிருப்பார் என்பது தெரியுமென்ருலும், அவளது அப்பாவைப் பற்றி வழக்கமாய்க் கேட்கும் அந்தக் கேள்வியைக் கேட்டுவைத்தான் பலராமன்.

''அப்பா டவுனுக்குப் போயிருக்காங்க. யாரோ ரெண்டு பேரை பார்த்துட்டு வரப் போனுங்க''

அவளுடைய அம்மாவைப் பற்றி விசாரிக்கவில்லை. ஏனென்ருல்.

அந்த நோயாளி இருட்டிவிட்டதும் உடம்பைப் போர்த்திக் கொண்டு படுக்கையில் முணகிக்கொண்டு கிடக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

சங்கரி அன்று மிகவும் அழகாய் இருந்தாள். குளித்த ஈரம் வாடாத கூந்தலை அள்ளிச் செருகி, கழுத்திலும் கைகளிலும் சந்தனம் தடவி, சேலையால் உடம்பைச் சுற்றியிருந்தாள். முகத்தில் ஏதோ ஒரு நாணம் கலந்த பூரிப்புடன் மிகக் கவர்ச்சியாகத் தோன்றினுள். அந்த அழகினை எல்லாம் அன்றிரவு முழுவதும் பூரணமாய் ஆண்டு அனுபவிக்க அவன் தயாரானுன்.

சங்கரி சிம்னி விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு, அந்த வெளிச்சத்தில் செல்வ மிதப்பிலே செழிப்பாக வளர்ந்திருந்த அவனது வாலிப்பான உடம்பைக் கடைக்கண்ணுல் ஆசையுடன் பார்த்தாள்.

"சங்கரி! விளக்கு எதற்கு? அங்கே கூடத்தில்கொண்டுவைத்து விட்டு வாயேன்."

அவள் வெட்கத்துடன் மெதுவாகச் சிரித்தாள். "விளக்கு இல்லேன்னு ஒரே இருட்டா இருக்காது? கொஞ்சம் வேணும்னு தணிச்சி வெக்கிறேன்" என்று திரியை இறக்கி விட்டாள்.

அவன் அவளது சங்கு வண்ணக் கழுத்திலே மல்லிகைச் சரத்தை மாலைபோல் தவழவிட்டு அவளது சந்தனம் மணக்கும் பூரிப்பான பூமேனியுடன் சேர்த்து கைகளினுல் வாரி அப்படியே நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். அந்த இறுக்கமான அன்பின் அணைப்பில் ஆடை சரிந்து நழுவ, அவள் மெய்ம் மறந்து கோரைப் பாயிலே தன்னைக் கிடத்திக் கொண்டாள்.

நேரம் சென்றுகொண்டே இருந்தது.

எங்கேயோ மணி இரண்டு அடித்தது கேட்டது.

"ஏங்க!"

"உம்?"

"இன்னிக்கு எவ்வளவு மகிழ்ச்சியா இருக்கேன் தெரியுமா! நூறு வயது இன்பமா வாழ்ந்திட்ட மாதிரி மனசெல்லாம் நெறஞ்சிக் கிடக்கு" என்று இன்ப மயக்கத்தில் புரண்டவாறே கிசுகிசுத்தாள் சங்கரி

"எனக்கும்தான்"

அப்போது அந்தக் குடிசைக்கு வெளியே ஏதோ சத்தம் கேட்டது. கடப்பாறையினுல் தோண்டுவது போன்ற சத்தம்.

'என்ன சங்கரி அங்கே சத்தம்?" என்று சற்றே திகில் அடைந்தவனுய்க் கேட்டான் பலராமன்.

"குழி தோண்டுகிருர்கள், கம்பம் நடுவதற்கு"

சற்று நேரம் அமைதியில் கழிந்தது

குடிசைக்கு முன்பாக நாலைந்து பேர் எதையோ சர சரவென்று இழுத்துக் கொண்டு வருவது போன்ற சத்தம்.

"என்ன சங்கரி அது?"

"வாழைமரம் நடுருங்க போலிருக்கு, விடிஞ்சா கல்யாணமில்லியா.

சற்று நேர மௌனம்.

திடீரென்று 'டும் டும்' என்று மேளச் சத்தமும் 'பீப்பீ' என்று அமுங்கி ஒலிக்கும் கிளாரினெட் இசையும் கேட்க ஆரம்பித்தது.

"என்ன சங்கரி......"

"கொட்டு மேளம் வந்தாச்சுங்க! விடிஞ்சா கல்யாண—"

"யாருக்கு?" என்று பதற்றத்துடன் கேட்டான்.

"நமக்குத்தானே!" என்றுநாணத்துடன் புன்னகைத்துக்கொண்டே அவனை இறுகத் தழுவி முத்தமிடுவதற்கு முகம் திருப்பினுள்.

சரேலென்று திகைத்து எழுந்து நின்ருன் பலராமன். அவசரமாக ஆடைகளை அணிந்துகொண்டான். அவனது கரங்களை இழுத்துப் பிடித்துக்கொண்டு கொஞ்சினுள் அவள்.

அப்போது வாசல் கதவைத் திறந்தவண்ணம் சாமிக்கண்ணு — சங்கரியின் தகப்பன் — உள்ளே நுழைந்து வந்தான். அவன் பின்னே உருமாலை கட்டிக்கொண்டு வைரம் பாய்ந்த மார்பை நிமிர்த்திக் கொண்டு நான்குபேர் நுழைந்தனர். புளித்த கள்ளின் கவிச்சு வீடெங்கும் பரவி அடித்தது.

பலராமன் பிரண்டுபோய் வெளியில் ஓடிவிடத் துடித்தான். ஆனுல் கதவைச் சாத்திவிட்டு நான்கு குண்டர்களும் அவனைச் சூழ்ந்து அமர்ந்துகொண்டனர்.

"மாப்பிளே! என் மவ இப்போ மூணுமாசம். பரவாயில்லே! உங்க ரெண்டுபேருக்கும் கச்சிதமான பொருத்தம்தான். விடிஞ்சதும் உமக்கே கட்டிக் கொடுத்திடறேன். அப்புறம் ரெண்டுபேரும சந்தோஷமாக குடும்பம் நடத்துங்க" என்று ஆசீர்வாதம் வழங்கினுன் சாமிக்கண்ணு.

பலராமனுக்கு வாய் அடைத்துப் போயிற்று. ஏதோ ஒரு கூண்டுக்குள் வசமாக மாட்டிக்கொண்டு வழி காணுமல் திகைப்பதுபோல் நடுங்கினுன். உடல் உதறல் எடுத்துக்கொண்டே இருந்தது.

குண்டர்கள் ஏதேதோ வம்புக் கேள்விகள் கேட்டனர். அவன் ஏதேதோ பதில் சொன்னுன்— இல்லை, உளறினுன். அவர்கள் கேட்டது என்ன, தான் சொன்னது என்ன என்பதெல்லாம் அவன் நினைவிலே ஒட்டவில்லை.

அதிகாலை ஐந்து மணி.

கொட்டும் மேளமும் முழங்கின. அவனுக்கு மாப்பிள்ளைக்கோலத்தை ஏற்றி கோயிலுக்கு அழைத்து வந்தனர். கெட்டிமேளம் கொட்ட, சுப்பிரமணியர் சாட்சியாக சங்கரியின் சந்தனக் கழுத்திலே தாலிக் கயிற்றை கட்டி முடித்தான் பலராமன்!

தெருவெல்லாம் மகிழ்ச்சி பொங்க கதை பேசிச் சிரித்தது!

மறுநாள் விடிந்தபோது?

அவன் ஒரு கோழை. சொந்த ஊரிலிருக்கும் அம்மா அப்பாவின் முகத்தில் விழிக்கும் தெம்பு அவனுக்கு இல்லை. அதனுல் தற்கொலை செய்துகொண்டான்.

ஆனுல் அவளுக்கு என்ன வந்தது?

அந்தப் பேதை, அவனை உண்மையிலேயே நெஞ்சார நேசித்தாள். அவள் வயிற்றிலே உருவான சிசுவுக்குப் பேரிட்டு அழைக்க அவன் இல்லை. அதனுல் அவளும் தன் காதலனைப் பின் தொடர்ந்தாள்.

முதல்நாள் மணமேடை கண்டு மகிழ்ச்சி கொண்டாடிய மயிலைப் பள்ளம், மறுநாள் பிணமேடையைக் கண்டு துக்கம்கொண்டாடியது! ●

## விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜூலை மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'

# சீர்திருத்தவாதி

அறவாழ்வைப் பொய்கரவு சூது கவ்வும்;
அறமவற்றை மறுபடியும வெல்லும்! இந்த
முறைமாற்றம் நிகழுங்கால் அறத்தின் ஆற்றல்
முளைக்கின்ற விதைபோல ஒளிந்தி ருக்கும்
உறைவாளை வெளிக்கொணரும் மறவன் போல
ஓய்ந்திருக்கும் அறவலியை வெளிப்ப டுத்திப்
பிறர்காணச் செய்கின்ற சூழ்ச்சி செய்யும்
பெற்றியனே சீர்திருத்த வாதி யாவான்!

உண்மைக்கு மதிப்பின்றேல் நேர்மை யான
உழைப்புக்கு மதிப்பின்றேல் கற்பின் மாண்ட
பெண்மைக்கு மதிப்பின்றேல் வணங்கத் தக்க
பெரியோர்க்கு மதிப்பின்றேல் பகட்டைத் தூர்த்த
எண்மைக்கு மதிப்பின்றேல் வாய்மை போற்றும்
எழுத்துக்கு மதிப்பின்றேல் அக்கால் உள்ளத்
திண்மைக்கு மதிப்பளித்துச் சமுதா யத்தைத்
திருத்துபவன் சீர்திருத்த வாதி யாவான்!

தீயநெறி உலகத்தில் நிலைத்தி ருக்கச்
செய்பவனோ சீர்திருத்த வாதி யல்லன்;
தூயநெறி பழுதற்று நிலைக்கச் செய்யுந்
தொண்டன்தான் சீர்திருத்த வாதி யாவான்;
ஆயநெறி அறமுறையை அவ்வக் கால
அடிப்படைகட் கேற்றதுபோல் புதுக்கிக் காட்டி
நேயமுற எல்லோரும் இன்பம் எய்தும்
நிலைவகுப்போன் சீர்திருத்த வாதி யாவான்!

பொதுவான ஊருணிக்குச் செல்லும் பாதை
புதர்மண்டி அடையாளங் கெட்டுப் போக
'எதுவானால் நமக்கென்ன?'' என்றி ருக்கும்
ஏமாளி ஊராரை ஒருங்கு கூட்டிப்
பதிவாகி வருங்கேட்டை எடுத்துச் சொல்லிப்
பாதையினைச் செப்பனிட முனைதல் வேண்டும்!
அதுபோலச் செய்வதுதான் சீர்தி ருத்தம்;
அறங்கொள்ளுஞ் செயலன்று சீர்தி ருத்தம்!

புறமதங்கள் புகுந்ததனால் பரத்தை யின்பால்
புதுமையல் கொண்டார்போல் தமிழர் சில்லோர்
துறவறமே மேலென்று துணிய லானார்;
தொன்மையதாந் தமிழ்நெறிக்கு மாசு கண்டார்.
திறமிகுந்த வள்ளுவன்தான் அந்நாள் தோன்றிச்
சீர்திருத்த உணர்வோடு குறளை யாத்தான்.
அறமென்றால் இல்லறந்தான்! அதற்கப் பால்தான்
அடுத்துள்ள பிறவறங்கள்! எனவ குத்தான்.

பிறப்புக்குள் பல்வகையாய் ஏற்றத் தாழ்வு
பிறப்பித்துச் சிறுபாலார் ஓங்கி வாழத்
திறப்புக்கள் பலவைத்த சமுதா யத்தின்
சிறுமைகளும் வெல்லும்போன் றிருந்த ஞான்று
"பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்'' என்ப தாகப்
பிறழ்ச்சிக்கே இடமின்றிச் சட்டஞ் செய்தோன்
சிறப்புக்கு நிகர்சொல்ல ஒருவ ரில்லை!
திருக்குறள்போல் சீர்திருத்த மறையும் இல்லை!

பணக்காரர் ஒருபுறமும் மதம்வ ளர்த்த
பாதிரிமார் ஒருபுறமுஞ் சூழ்ந்து கொண்டு
குணக்கேடன் கொற்றவனை ஏழை மக்கள்
குருதியிலே குளிப்பாட்டிக் கொண்டி ருக்கப்
பிணக்காடாய் மாறியது பிரஞ்சு நாடு!
பிழைநீக்க வந்தவராய் வால்டேர் ரூசோ,
கணக்காகச் சீர்திருத்த வேள்வி செய்தார்
கட்டுரையாற் புரட்சித்தீ எரிய விட்டார்!

மிடியாட்சி எளியவரை மிதித்த ஆட்சி
விளைப்போர்க்கு விளைவுதரா விதியின் ஆட்சி
முடியாட்சி இவ்வாட்சி முடிய வேண்டும்
முறைசெய்து மக்கள்தமை மக்கள் ஆளும்
படியாட்சி வரவேண்டும் உழைப்போ ரெல்லாம்
பசிதீரப் பெறவேண்டும் என்ற நோக்கில்
குடியாட்சி என்னுமொரு கொள்கை கண்டு
கொடுத்ததுவுஞ் சீர்திருத்த மூளை யன்றோ!

மடம்பட்ட இளம்பெண்கள் கைப்பி டித்த
மணவாளர் ஊழ்வலியால் இடையில் மாண்டால்
உடன்கட்டை ஏறுவராம் முன்னை நாளில்
உயிரோடு நெருப்பிடையே மூழ்கு வாராம்!
முடம்பட்ட சமுதாயக் கொள்கை. இந்த
முழுமூடப் பழக்கத்தைப் புதைப்ப தற்குத்
திடம்பெற்றோன் சேயிழையார் துன்பந் தன்னைத்
தீய்த்ததுவுஞ் சீர்திருத்த அறிவா லன்றோ!

ஆண்டாரோ அடியவரோ யாவரேனும்
ஆண்டவனின் திருமுன்னர் நிகரே யாவர்
வேண்டாமை வேண்டுதல்ஒன் றில்லா தானறன்
வீடுவர எல்லார்க்கும் உரிமை உண்டாம்!
தீண்டாமை என்கின்ற திரையைப் போட்டுச்
சிலருக்கவ் வுரிமையினை மறுத்த காலை
வேண்டாத அத்திரையைப் பொசுக்கு தற்கு
வெகுண்டதுவுஞ் சீர்திருத்த மனமே யன்றோ!

வீதிக்கு வீதியொரு சாதி யிங்கே!
வெங்காயத் தோலுக்குள் தோலைப் போலச்
சாதிக்குள் நூறுவகைச் சாதி! இந்தச்
சமுதாய நோய்ப்படைகள் சீர்தி ருத்த
வாதிக்குப் பகைமலைகள்! இவற்றில் மோதி
வாழ்விழந்தோர் உளரெனினும் அன்னார் வாழ்ந்த
சேதிக்குப் புகழிருக்கும் நாட்டில்! என்றுஞ்
சீர்திருத்த வழிச்செல்வோர் பெரியார் ஆவர்!

வெண்மையர்க்கும் கருப்பர்க்கும் இடையில் உற்ற
வேற்றுமையைத் தகர்த்தெறியும் போராட் டத்தில்
அண்மையிலே செத்தானே அமெரிக் காவில்
அவனுமொரு சீர்திருத்த வாதி தானே!
மண்மிசையோர் சீர்திருத்த வாதிக் கென்றும்
மலர்ப்படுக்கை யாயிருப்ப தில்லை வாழ்க்கை!
உண்மையிலே அவன்பிறருக் காகத் தன்னை
உருக்கி அழித் துக்கொள்ளும் மெழுகு வர்த்தி!

— புதுவை சுப்பிரமணியன் —

# உலகின் பெண் மேதை டோரதீயா

அறிவுக்கும் வயதிற்கும் சம்பந்தம் உண்டா? என்று கூறுபவர்கள் ஏமாந்துதான் போக வேண்டும். ஜெர்மனி நாட்டில் 1770-ஆம் ஆண்டு டோரதீயா பிறந்தாள். 1786-ஆம் ஆண்டில்—அதாவது தன் பதினறுவது வயதில் அவள் டாக்டர் பட்டம் பெற்ருள். பி. எச். டி. (டாக்டர் ஆஃப் பிலாசெபி) பட்டம் பெறுகையில் அவளுக்குச் சரியாக வயது 16! நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறதல்லவா?

பெண்கள், ஆண்களுக்குத் தாழ்ந்தவர்கள் என்ற மனப்பான்மை விரிந்து மக்களிடையே பரவிக்கிடந்த காலம் அது. சரித்திரப் பேராசிரியரான தந்தை மகளை ஊக்குவித்தார்; படிப்பில் உதவிபுரிந்தார். சிறு வயதிலேயே கல்வியில் தீவிர நாட்டம் கொண்டிருந்த டோராதீயா, தன்னுடைய ஏழாவது பிராயத்திலேயே சரித்திரம், தாவர இயல், இரசாயனம், மருந்தியல் (Medicine) முதலியவற்றில் தேர்ச்சி பெற்று விளங்கினுள். அது தவிர பல்வேறு மொழிகளையும் பயின்று வந்தாள். சின்னஞ்சிறு பருவத்திலேயே 'பித்தகோரஸ் தியரத்'தை அருமையாக விளக்கிக்கூறும் ஆற்றலைப் பெற்றிருந்தாள். தன்னுடைய 16வது வயதில் பழம்பெரும் மொழிகளான இலத்தீன், கிரீக், ஈப்ரு முதலியவைகளையும் சேர்த்து பத்து அந்நிய நாட்டு மொழிகளை நன்கு பேசவும் எழுதவும் அறிந்திருந்தாள். படிப்போடு வீட்டுக் கடமைகளையும் மறந்துவிடவில்லை டோரதீயா. அருமையாகச் சமையல் செய்வாளாம்!

கிடைத்தற்கரிய டாக்டர் பட்டத்தைப் பெற்ற உலகின் முதல் பெண்மணி இவளேயாவள்! தன்னுடைய 21-வது வயதில் மேல் சட்டசபை அங்கத்தினரான கனவான் 'மாத்தாஸ் வான்ரோட்' என்பவரை மணம் புரிந்து கொண்டாள்.

பேச்சாற்றலிலும் சிறந்து விளங்கினுள் டோரதீயா. அவளுடைய அழகான,—ஆழமான பேச்சுத் திறனை எல்லோரும் போற்றினுர்கள். எங்கு அவள் சென்ருலும் மக்கள் கோலாகலமாக வரவேற்ருர்கள்! சிக்கலான பிரச்னைகளை மிக எளிதில் அலசித் தெளிவு கண்பாள் அவள். அற்புதமான எழுத்தாற்றலும் பெற்றிருந்தாள்.

டோரதீயா என்னும் வார்த்தைக்கு "கடவுளின் பரிசு" (Gift of God) என்பது பொருள். ஆம். டோரதீயா கடவுள் உலகுக்குஅளித்தபரிசு தான்!

அவளுடைய தோற்றம் கவர்ச்சிகரமாக இருக்கும். அவளுடைய தோற்றப் பொலிவில் மனம் லயித்துப்போன 'ஆண்டனி கௌடன்' என்ற புகழ்பெற்ற சிற்பி, அவளைச் சிலையாக வடித்தார். மிதமிஞ்சிய அழகும் அறிவும், அற்புதமான ஆற்றலும் ஒருங்கே அணையப் பெற்ற டோரதீயா தன் 55 வது வயதில் மரணம் அடைந்தாள்.

ஆண்டனி வடித்த அற்புதச் சிலை இன்றும் ஜெர்மனி நாட்டில் இருக்கிறது. அவளுடைய புகழும் பெருமையும் இன்னும் நிலைத்து நிற்கிறது. ஆனுல்,—

பாரோர் அதிசயிக்கும் வண்ணம் அறிவைப் பெற்று விளங்கிய டோரதீயா மட்டும் நம்மிடையே இல்லை!

"ஜே. வி. நாதன்."



## அண்ணு!

செந்நாப் போதார் செப்பிய குடிமை
கண்ணுய்ப் பேணிக் காக்கு நற்குடி
நீள்வயல் உழைத்து நெற்குன் றெடுத்துச்
சூழஞ் சுற்றம் ஓம்பு நற்குடி;
அறிவா னுயர்ந்து அரிய வொழுக்க
முறையிற் சிறந்து மூத்த குடியே;
இகலெது வரினும் இரையாய்க் கொண்டு
புகலென வருவோர் புரக்குந் திருவூர்
வெம்புலி வென்று வஞ்சினம் முடித்து,
அம்புவி வியக்க அருங்கலே வளர்த்த
பல்லவன் மூதூர்; பழம்பெயர்ப் பதியே:
நல்லோர் வாழ்த்தும் நெடுங்கதி ரனையோன்
அலைகடல் அனைய அகன்ற அறிவோன்
அலைகடல் போன்று அலையா மதியோன்
நீள்வான் நாணும் பரந்த மனத்தோன்
நீள்வான் போன்று மறையா உளத்தோன்
வறுமை ஆடும் வென்றிக் கூத்தைப்
பொறுமைக் கலத்தாற் பொடித்திட எழுந்தோன்
அழுது கலங்கி அரற்றுங் கண்கள்
தொழுது போற்றத் துடைக்குங் கரத்தோன்
முத்தமிழ் காக்க மாண்டார் கொள்கை
எத்துணை இடுக்கண் எதிர்வந் துறினும்
காத்து நிற்போன்; கலங்கா நிலையோன்;
ஈர்த்து நின்று கோள்கள் தம்மை
இல்லஞ் சிதையா நிறுத்துங் கதிர்போல்
வெல்லத் தமிழ்க்குடி விளங்கக் காப்போன்;
அண்ணு என்றோர் உருவில்
என்றுங் காண்போம் இன்ப மிங்கே!

—தேநிலவன்—



# இலண்டனில் இருபது நாட்கள்

என்ன சதி? என்ன நடந்தது? அன்று கொழும்பில் எனக்குக் கூட்டம், ஸ்ரீ நாராயணகுரு மண்டபத்தில் நண்பர்கள் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தனர்.

நானும் தங்கிருந்த ஹோட்டலில் இருந்து கூட்டத்திற்காகப் புறப்பட்டேன். "மப்டி"யில் போலீசாரும் என் கார் பின்னால் இன்னொரு காரில் வந்துகொண்டிருந்தனர். மண்டபத்திற்குள் சென்றேன். பெருங்கூட்டம் மக்கள் கைதட்டி வரவேற்றனர்.

மேடையில் அமர்ந்தேன். என்னோடு இலங்கை செயலாளர் இரா. அதிமணி, திரு. டி. எம். பீர்முகமது, திரு. வி. எஸ். முருகன், திரு. கலாநேசன் ஆகியோர் இருந்தனர். என்னை வரவேற்று நண்பர்கள் பேசிய பின், எனக்கு ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டபின், "நான் பேசுவேன்" என்று கூட்டத் தலைவர் கூறினார். ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

நான் ஒலிபெருக்கி முன்னால் நின்று "தலைவர் அவர்களே"—என்றுதான் சொல்லி இருப்பேன். 'படார்'—என்ற வெடி சப்தம் கேட்டது. என் காதோடு உரசிக்கொண்டு சென்ற 'பாம்' (குண்டு) எனக்கு பின்னால் ஹாலில் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஸ்ரீ நாராயண குருவின் படத்தில் பட்டு, படமும் கண்ணாடியும், சுக்கல் சுக்கலாக உடைந்து நாலாபக்கமும் சிதறியது. என் அருகில் நின்ற சிலர்மீது கண்ணாடித் துண்டுகள் பாய்ந்து, இரத்தம் கொட்டியது.

எனக்கு குறிவைத்து எறியப்பட்ட அந்தக் குண்டு மட்டும் என் முகத்தில் பட்டிருந்தால் நான் இறந்து இப்போது பதினான்கு வருடங்கள் ஆகியிருக்கும். இலங்கைப் பயணம் எனது முதல் வெளிநாட்டுப் பயணமாக மட்டுமல்ல, எனது 'இறுதி யாத்திரை'யாகவும் இருந்திருக்கும்.

வெறிபிடித்து குண்டு வீசியவன் பயத்தில் பதட்டத்தில் நடுக்கத்தில் குறி தவறிவிட்டான். அதனால் நான் பிழைத்தேன்.

குண்டு வீசப்பட்டு வெடி சப்தம் கேட்டவுடனே கூட்ட மண்டபத்துக்குள்ளேயும் குழப்பம்; வெளியே இருந்தும் திட்டமிட்டவர்கள் தாக்குதலை நடத்தினார்கள்.

தன்நலம்கருதாத தன்மான இயக்கத்தைச் சேர்ந்த தி. மு. கழக தீவிரவாதிகள் மண்டபத்துக்குள்ளே இருந்த குழப்பவாதிகளை அடக்கினர்.

என்ன நடக்குமோ—என்று எதிர்பார்த்து என்னை நிழல்போல் தொடர்ந்து வந்த போலீசார் உடனே போன் செய்து போலீஸ் படையை வரவழைத்து கலவர வாதிகளை விரட்டி அடித்தனர்.

கூட்டத்தில் அமைதி ஏற்பட்டது. நான் பேச ஆரம்பித்தேன். அன்று நான் பேசிய பேச்சு எனக்கே பிரம்மாதமாக இருந்தது. என் மீது எதற்காக குண்டு வீச்சு—இந்தக் கேள்வி அடிப்படையிலேயே என் பேச்சு அமைந்திருந்தது. தி. மு. கழகக் கொள்கைகளை தெளிவாக விளக்கினேன்.

அடுத்து நடந்த எல்லாக் கூட்டங்களும் மிக அமையாக நடந்தன. தோட்டத் தொழிலாளர்கள் கூட்டங்களிலும், கல்லூரிகளிலும் சுமார் 40 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்.

தி. மு. கழகம் ஒரு கலாச்சார இயக்கம் என்பதையும் — இலங்கை அரசியலில் இலங்கையருக்கு விரோதமாக தி. மு. கழகம் ஈடுபடாது—என்பதையும் எல்லாக் கூட்டங்களிலும் விளக்கினேன்.

இருபத்திரண்டு நாட்களும் அலுப்புத் தட்டாமல் இனிய நாட்களாக இருந்தன. கப்பலில் புறப்பட்டு இரண்டு மணி நேரத்திற்குள்ளாக தமிழக தனுஷ்கோடி வந்து சேர்ந்தேன்.

இதுதான் எனது முதல் வெளிநாட்டுப் பயணம்.

[வளரும்]

ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.

# கேள்வி ? பதில்

**1. நாசரைப் பற்றி வருகின்ற செய்திகள் வருந்தத் தக்கதாக இருக்கின்றனவே ஏன்?**

கடந்த ஆண்டு நடைபெற்ற எகிப்து — இஸ்ரேல் போரின் போதே இதுபோன்ற வருந்தத் தக்க செய்திகள் வரத்தொடங்கி விட்டன. எகிப்து இராணுவத்துக்குள்ளேயே சதிகாரர்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு 60க்கு மேற்பட்டவர்களும் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோது நாசரது மூளையில் "புண்" ஏற்பட்டிருப்பதாகவும். அவர் ரஷ்யா சென்று சிகிச்சை பெறுவதாகவும் செய்தி வந்தது. அதனை அடுத்து மூளையில் "புண்" மட்டும் அல்ல—குழப்பமே ஏற்பட்டிருப்பதாக வாஷிங்டன் போஸ்ட் என்ற ஏடு செய்தி தந்துள்ளது. எகிப்திய இராணுவத்தில் ரஷ்யாவின் ஆதிக்கம் மிகுந்துபோய் இருப்பதாகவும், இதனால் எகிப்திய இராணுவம் "சீறி"க் கொண்டிருப்பதாகவும்— இதுவே நாசரது மூளைப் "புண்"ணுக்குக் காரணமென்றும் அது தெரிவித்துள்ளது. மொத்தத்தில் நாசர் பற்றிய செய்திகள் மட்டுமல்ல, எகிப்து பற்றிய செய்திகளே கவலைப்படத்தக்கவையாகத்தான் இருக்கின்றன. காரணம் "ராஜதந்திர"ப் பஞ்சமாகத்தான் இருக்கவேண்டும்.

**2. பருத்திக்குப் பதில் டெரிலின் போன்றவைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் பக்ருதீன் அகமது கூறி இருப்பது எதைக் குறிக்கிறது?**

செயல்பட்டுக் கொண்டிருக்கிற சில ஆலைகளைக்கூட "மூடிவிடுங்கள்" என்று அச்சுறுத்துகிறார் என்றுதான் நினைக்க வேண்டி இருக்கிறது. இல்லையென்றால் பருத்தி ஆலைகளின் வாழ்வு 'திரிசங்கு' சொர்க்கத்தில் இருக்கிற இந்த நேரம் பார்த்து இப்படிப்பட்ட யோசனையைத் தெரிவிக்கும் துணிவு வருமா? டெரிலின் டெரிகாட்டன், டெரிலெக்ஸ் போன்றவைகளின் உற்பத்தியையும் இறக்குமதியையும் தடைச் செய்யும் படியாகக் குரலெழுப்பத் தொடங்க வேண்டியதுதான்!

**3. தமிழகத்தில் இந்திக்கு எதிர்காலம் உண்டா?**

தமிழகத்தில் இனியும் காங்கிரசுக்கு எதிர்காலம் உண்டு என்று நினைக்கிறீர்கள்?

**4. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தங்கள் தாய்மொழியிலேயே பேச முடியாதா?**

கழக உறுப்பினர்கள் அங்கே அமரச் செல்லும் வரையில் அது முடியாமல்தான் இருந்தது. இப்போதுதான் அப்படிப் பேசலாம் என்று பொதுவாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இரா. செழியன் அவர்களது ஒரு மசோதா, இந்த வாய்ப்பை அரசியல் சட்டம் மூலம் உறுதிப்படுத்தக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

**5. எட்வர்டு கென்னடி துணை ஜனாதிபதி பதவிக்குப் போட்டி இடப் போவதில்லையாமே?**

ஆமாம்! தனிப்பட்ட சில காரணங்களால், தான் எத்தகைய நிர்ப்பந்தங்களுக்கும் பணியப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார். கென்னடி குடும்பத்தில் எஞ்சியுள்ள அவராவது உயிரோடு இருக்கட்டுமே!

**6. இந்தியாவின் வேலையில்லாத் திண்டாட்டம் எப்போது தீரும்?**

துணைக்கண்டத்து மக்கள் அனைவரும் "கருத்தடை"யைக் கைக்கொள்ளும் போது!

**7. விமான விபத்துக்கள் நாளுக்கு நாள் மிகுந்துகொண்டு போவது எதைக் குறிக்கிறது?**

அவற்றை இயக்குபவர்களும் மனிதர்கள்தானே! நாளுக்கு நாள் அவர்களுடைய பிரச்னைகளும் மிகுந்துகொண்டே இருப்பதனால் தானோ என்னவோ!

**8. அரசியல் வினாக்களுக்கு மட்டும்தான் பதில் தருவீர்களா?**

அப்படியொன்றுமில்லை, சினிமா தொடர்பானவை தவிர கேட்கப்படுகின்ற அனைத்துக்கும்; பிரசுரிக்கத்தக்க வினாக்களுக்கு மட்டும்!

**9. பாகிஸ்தான் மீண்டும் இந்தியாவுடன் மோதுமா?**

மோதாது என்று யார் சொன்னார்கள்? இப்போதைய அதன் படைபலம் 1962-ல் இருந்ததை விட இரண்டு மடங்கு அதிகமாம்! இந்தியாவும் எச்சரிக்கையோடுதான் இருக்கிறது! மலையுடன் மோதும் "மண்டை" காயம் படாமலா இருக்கும்?

**10. இந்தியா — பாக் சண்டை ஏற்பட்டால் ரஷ்யா எந்தப் பக்கம் இருக்கும்?**

நியாயத்தின் பக்கம்தான் என்று நம்புவோமாக!

**11. சீனாவில் இன்னமும் கலாசாரப்புரட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா?**

ஏதோ ஒரு புரட்சி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது! கலாசாரப் புரட்சியை நிறுத்தும்படி மா—சே—துங் கட்டளையிட்டதும், புரட்சியை நடத்தியவர்கள், யாருக்கோ பயந்து தற்கொலை செய்து கொள்கின்றனராம் கூட்டம் கூட்டமாக! கும்பல் கும்பலாக! இதுவும் ஒரு புரட்சிதானே!

**12. காங்கிரஸ் கவி, கட்சியை விட்டு விலக்கப்பட்டு விடுவாரா?**

சுப்பிரமணியத்துக்கு எதிராக முகாம் அமைத்துச்செயல்பட்டுக் கொண்டிருப்பவர். நீதி மன்றங்களையே சட்டைசெய்யாத அவர், சுப்பிமணியத்தையா சட்டை செய்யப்போகிறார்! சுப்பிரமணியத்தின் ராஜ தந்திரத்தைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

உரைகல்:

## கலை நிலவு

(கவிதைகள்)

[ஆசிரியர்: கவிஞர் அன்பு நிலவன்.

வெளியிட்டோர்:

கலைச்செல்வி பதிப்பகம்,

பாகூர், (வழி) கடலூர்.

புதுவை மாநிலம்.

பக்கங்கள் 118; விலை ரூ. 2.

கவிஞர் அன்பு நிலவன் எழுதிய கவிதைகளின் தொகுப்பு இந்நூல். தமிழ், இயற்கை, காதல், வாழ்வு ஆகிய நாற் பெருந்தலைப்புக்களின் கீழ் நாற்பதுக்கும் மேற்பட்ட நறுங் கவிதைகளைப் படைத்துள்ள கவிஞரின் திறன் பாராட்டுதற்குரியது.

''அன்பு நிலவன் ஆக்கிய கவிதைகள் இன்பந்தருவன'' என்பது பாவேந்தரின் பாராட்டு.

தமிழுக்கு முதலிடம் கொடுத்து, முத்தமிழ் அன்னைக்குக் கவி முத்தாரம் சூட்டியுள்ளார். தமிழை மலையாகவும், அதனை அழிக்கவரும் மொழிகளைத் தூசாகவும் மதிக்கிறார்.

''சின்னக் குறுநரிபோல் செம்மையிலா மொழிகள் உன்னை அடிப்படுத்த ஓயா தொழியாமல் இந்நாள் முயலுவதை என்னென்று சொல்வது நாம் அன்பே! அடர் மலையைத் தூசோ அழித்துவிடும்?''

என்ற கவிதையின் வாயிலாக தன் உள்ளக் குமுறலைத் தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தும் திறன் போற்றுதற்குரியது

''தமிழ்க் காவலன்'' என்னும் தலைப்பில் தன்னிகரில்லாத் தனிப்பெருந் தலைவன் அறிஞர் அண்ணாவுக்கு ஆறு வெண்பாக்களால் புகழாரம் சூட்டி மகிழ்கிறார் புதுமைக் கவிஞன் அன்பு நிலவன்.

''தன்பக்கம் இல்லாத் தகையோரையும் தன்பக்கம் ஈர்க்கும் திறலான்''

''செந்தமிழ்க் கொன்றென்றால் சீறுவான்''

''பொருள் விளங்கும் தீங்குறள்போல உருவுடையான்'' என்றெல்லாம் தமிழ்த் தாயின் தலைமகன் போற்றப்படுகிறார்.

''காதல்'' பற்றிய கவிதைகளில் சில, கவிஞர் தம் சொந்த வாழ்வினின்றும் முகிழ்த்தனவோ என எண்ணும்படி அமைந்துள்ள திறன் பாராட்டுதற்குரியது. 'வாழ்வு' என்னும் தலைப்பில் கவிஞரின் மகள் கலைச்செல்வி கவிநடம் புரிவதைக் காணலாம்.

உண்மைக் காதல் ஒருக்காலும் பொய்க்காது என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை உடையவர் என்பதனை —

''ஊன்பொய்க்கும் உயிர்பொய்க்கும் உளத்திலெழும் நறுங்காதல் பொய்த்தல் இல்லை'' என்ற வரிகளின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

எளியமுறை — தெளிந்தநடை — அழகிய சொல்லடுக்கு — சிறந்த கற்பனை ஆகிய அனைத்தும் நிறைந்தது அன்பு நிலவன் கவிதைகள். ''திரு அன்பு நிலவன் நல்ல உணர்ச்சிமிக்க உள்ளமும், சிறந்த ஓசை நயம் துய்க்கும் செவியும் வாய்ந்தவர்'' என்ற டாக்டர் மு. வ. அவர்களின் பாராட்டுரை முற்றிலும் உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

—மணிவேந்தன்.

9 ம் பக்கத் தொடர்ச்சி

வெற்றியிருக்கிறது. நம்முடைய காதல் வெளிக்குத் தெரியவேண்டும் என்று நெடுநாட்களாக ஆசைப்பட்டேன். இன்றுதான் அந்த நாள் வந்தது. வருத்தப்படாதே அல்பா! வழக்கு மன்றம் ஏறிவிட்டது. தீர்ப்பை எதிர்பார்ப்போம். உனக்கொரு தோழி இருந்தால் என்ன செய்வாளோ, அதை நாளைக்கு யாரோ ஒரு மகராசன் செய்யப் போகிறான். சஞ்சலப்படாதே! வெற்றி நமக்குத்தான்!'' பெர்க்ளீஸ் உரிமையுடன் அல்பாஷியாவின் முகவாய்க்கட்டையைக் கிள்ளிக் கொண்டே அவளுக்கு ஆறுதல் கூறினான்.

அடுத்த மணி ஒலித்தது. இரண்டேமுக்கால் நாழிகை ஓடியதே காதலர்களுக்குத் தெரியவில்லை.

''காவல்காரன் வந்துவிடுவான். நான் அவனிடம் பொறுப்பை ஒப்படைத்துப் போகவேண்டும். போய் வரட்டுமா?'' என்றான்.

பெர்க்ளீஸ் நன்றிக்குப் பதிலாக முத்தமிட்டு அனுப்பிவைத்தான். அல்பாஷியா சிப்பாய் நடைபோட்டு முகப்பு வாசலுக்குப் போனாள். அவள் உள்ளத்தில் எழுந்த கலவரம் ஓயவில்லை, விடியப்போகும்பொழுது தீவினையுடன் விடியப்பேகிறதே என்ற துயரத்தோடு நடந்தாள். அவளது எதிர்கால விதியும் தயங்கித் தயங்கி அவளுடனேயே நடந்தது!




## கர்த்தர் மன்னித்தாலும்...

இயேசுநாதர் ஒருமுறைதான் சிலுவையில் அறையப்பட்டதாகக் கேட்டிருக்கிறோம்! அவர் மீண்டும் உயிர்ப்பெற்று விண்ணுலகு ஏகியதாகக் கூறப்படுவதுண்டு. சிலுவைச் சின்னங்களே இயேசுநாதரை நினைவூட்டி அவர் தம் அறிவுரைகளை மேற்கொள்ளத் தூண்டக் கூடியனவாகும். இப்படி இருக்க இரயில் ஸ்லீப்பர் கட்டைகளைச் சிலுவையாக்கி, அதில் ஒரு நபரை இயேசுநாதரைப் போலவே கைகளிலும் கால்களிலும் ஆணி அடித்து மாட்டி இருக்கிறார்கள் வட மேற்குலண்டனில். கொலைக் கொடுமைக்குக்கூட புனிதச் சின்னம் பயன்படுத்தப்பட்டிருப்பது வருத்தத்தக்கது. ஜோசப் ரிச்சர்டு டிஹவிலாலண்டு என்ற அவரை, மருத்துவமனையில் சேர்ப்பித்தும் மாண்டுபோனாராம்! கர்த்தர் இதனைச் செய்த கொடுமைக்காரர்களை மன்னித்தாலும், இலண்டன் போலீசு மன்னிக்கப் போவதில்லை என்பதுபோலத்தான் தீவிர புலனாய்வுகளைத் துரிதப்படுத்தியுள்ளது.

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

# சித்தர் நவலோக கல்பம்

தங்கம், வெள்ளி, தாமிரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.



டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளையின்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை

—[REGD]—

307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு

திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம்,
யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும்,
டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே
பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்

நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிறார்.


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-8 6சி. திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.